மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

முன்னிலை :-திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**இடைநிலை மனு எண்.181/2025**

**உள்**

**அசல் வழக்கு எண். 4/2024**

பூபதி ... மனுதார்/பிரதிவாதி

... எதிர் ...

கனிமொழி ... எதிர்மனுதார்/வாதி

இந்த மனுவானது 27.06.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 01.04.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதார்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜஹாங்கீர், அவர்கள் முன்னிலையாகியும், மனுவினை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டு இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**உத்தரவு**

1) இம்மனுவானது அசல் வழக்கில் மனுவில் குறிப்பிட்டவாறு 03.06.2024 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்:-</u>

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியாவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரருக்கு எதிராக வழக்குச் சொத்தின் சுவாதீனத்தை ஒப்புவிக்க தீர்ப்பாணை வேண்டி தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்/வாதியாகிய தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்க செய்ய கடந்த 03.06.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மேற்படி தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரர்/வாதிக்கு சாதகமாக கடந்த 03.06.2024 ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒருதலைபட்ச உத்தரவு சாட்சி விசாரணைக்காக 21.04.2025 ம் தேதி வாய்தா ஏற்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், தனது தரப்பு எதிர் வழக்குரைக்காக வாய்தா ஏற்பட்ட 03.06.2024 ம் தேதி தான் மலேசியாவில் பணி செய்து வருகின்ற நிலையில் பணி நிமித்தமாக மலேசியாவிற்கு கடந்த 08.12.2023 ம் தேதி சென்று இறுதியாக 07.02.2025 ம் தேதி தான் இந்தியாவிற்கு வந்ததாகவும், அதனால் தற்பொழுது தான் தனக்கு வழக்கு விபரங்கள் தெரியவந்ததாகவும், நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணை தனக்கு சரியாக சார்பு செய்யமுடியாமல் வழக்கு சொத்தில் ஒட்டி சார்பு செய்துள்ள விபரமும் தற்பொழுது தான் தனக்கு தெரியவருகிறது என்றும், தான் வெளிநாட்டில் இருந்ததால் தான் தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும், இந்த தவறானது தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், இத்துடன் தனது தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இதனால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்றும், எனவே தனக்கு எதிராக கடந்த 03.06.2024 ம் தேதி பிறப்பித்துள்ள ஒருதலைபட்ச உத்தரவை (Exparty Order)இரத்து செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்

மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் கண்டுள்ள சங்கதிகளில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவை யாவும் வன்மையாக ஆட்சேபணை செய்யப்படுகிறது. கடந்த 03.06.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மேற்படி தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒருதலைபட்ச உத்தரவு சாட்சி விசாரணைக்காக 21.04.2025 ம் தேதி வாய்தா ஏற்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர் தரப்பு எதிர் வழக்குரைக்காக வாய்தா ஏற்பட்ட 03.06.2024 ம் தேதி மனுதாரர் மலேசியாவில் பணி செய்து வருகின்ற நிலையில் பணி நிமித்தமாக மலேசியாவிற்கு கடந்த 08.12.2023 ம் தேதி சென்று இறுதியாக 07.02.2025 ம் தேதி இந்தியாவிற்கு வந்ததாகவும், அதனால் தற்பொழுது தான் மனுதாரருக்கு வழக்கு விபரங்கள் தெரியவந்ததாகவும், வெளிநாட்டில் இருந்ததால் தான் தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும் கூறியுள்ளது அப்பட்டமான பொய்கூற்றாகும். மனுதாரர் தரப்பில் வேலை நிமித்தமாக மலேசியா சென்று வந்ததாக கூறப்படும் நிலையில் அதற்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யாமல் இருப்பதிலிருந்தே மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது ஆகும் என்றும், மனுதாரர் கடந்த 07.02.2025 ம் தேதி மலேசியாவிலிருந்து இந்தியா வந்ததாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அதன் பின்னிட்டு ஏற்பட்ட கடந்த 28.02.2025, 26.03.2025, 21.04.2025 மற்றும் 16.06.2025 தேதிய வாய்தாக்களில் ஆஜராகி வழக்கை மேல்நடத்த போதிய கால அவகாசம் இருந்தும் அவரது தரப்பிலிருந்து எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் அலட்சியமாக இருந்துவிட்டு வேண்டுமென்றே காலம் தாழ்த்தி தன்னை அலைக்கழிப்பு செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணித்தில் மோசடியான சங்கதிகளை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால்

இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தும், ஒருவேளை அனுமதிக்கப்படும் பட்சத்தில் அதனை கூடுதல் செலவுத் தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இருதரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

**6)** <u>தீர்வு</u>

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் அசல் வழக்கில் கடந்த 03.06.2024 ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா வந்தபோது அன்றைய தினம் மனுதாரர்/ பிரதிவாதி மலேசியாவில் பணி செய்து வந்ததாகவும், பணி நிமித்தமாக கடந்த 08.12.2023 ம் தேதி மலேசியா சென்றுவிட்டு கடந்த 07.02.2025 ம் தேதி தான் இந்தியாவிற்கு வந்ததாகவும் அதனால் தன்னை சந்திக்க இயலாமல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் மனுதாரருக்கு எதிராக 02.06.2024 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது நீதியின் நலன் கருதி அவசியமாய் உள்ளது. இல்லாதுபோனால் மனுதாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். என்றும், இத்துடன் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி

03.06.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

6.2) மாறாக எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் மனுதாரர் தரப்பு எதிர் வழக்குரைக்காக வாய்தா ஏற்பட்ட 03.06.2024 ம் தேதி மனுதாரர் மலேசியாவில் பணி செய்து வருகின்ற நிலையில் பணி நிமித்தமாக மலேசியாவிற்கு கடந்த 08.12.2023 ம் தேதி சென்று இறுதியாக 07.02.2025 ம் தேதி இந்தியாவிற்கு வந்ததாகவும், அதனால் தற்பொழுது தான் மனுதாரருக்கு வழக்கு விபரங்கள் தெரியவந்ததாகவும், வெளிநாட்டில் இருந்ததால் தான் தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும் கூறியுள்ளது அப்பட்டமான பொய் என்றும், அதற்கான ஆவணங்கள் தாக்கல் இல்லை என்றும், மலேசியாவிலிருந்து இந்தியா வந்ததற்கு பிறகும் இம்மனுவை உடனடியாக தாக்கல் செய்யாமல் காலதாமத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அதனால் எதிர்மனுதாரர் வழக்கை இழுத்தடிப்பு செய்யவே முயல்கிறார் என்றும், மனுவில் தகுந்த முகாந்திரம் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

6.3) அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக வழக்கு சொத்தின் சுவாதீனத்தை ஒப்புவிக்க தீர்ப்பாணை வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது ஒருதலைபட்ச உத்தரவு சாட்சி விசாரணைக்காக 21.04.2025 ம் தேதி வாய்தா ஏற்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மனுதாருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.4) மனுதாரர் உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததற்கு தான் வேலை நிமித்தம் மலேசியாவிற்கு சென்றுவிட்ட காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார். இந்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மனுதாரர் தனது கடவுச்சீட்டு (passport)-ஐ தாக்கல் செய்துள்ளார். மேற்படி கடவுச்சீட்டு-யை பார்வையிட்டதில் மனுதாரர் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 03.06.2024 ம் தேதிய காலகட்டத்தில் வெளிநாட்டில் இருந்தார் என்பதை அறிய முடிகிறது. 10.06.2024 ம் தேதி தான் வெளிநாட்டிலிருந்து வெளியே வந்ததற்கான பதிவுகள் காண முடிந்தது. எனினும் மனுதாரர் மேற்படி அசல் வழக்கை தனது வழக்கறிஞர் மூலம் வழக்கை நடத்தி வந்துள்ளார் என்பதை வழக்கில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து மூலம் அறிய முடிகிறது. வாதியின் வழக்கு மற்றும் வழக்கின் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், எதிர்வழக்குரையை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரருக்கு அவர் தரப்பை தெரிவிக்க வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும், தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகளை இறுதியாக தீர்மானிக்கவும், தரப்பினர்களுக்கிடையே மேலும், மேலும் வழக்குகள் ஏற்படுவதை தடுக்கவும், மனுதாரர் அசல் வழக்கை மேல் நடத்த விருப்பமாக உள்ளதை கவனத்தில் கொண்டும், ஏற்படுத்திய காலதாமதத்திற்கு, நீதியின் நலன் கருதி இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

முடிவாக, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.**500/-** செலுத்த உத்தரவிட்டும் மேற்கண்ட செலவுத்தொகையை **27.04.2026** தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்தவேண்டும் எனவும், செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு எவ்வித உத்தரவின்றி தானாக தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.17 18:29:18 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**நத்தம்.**

இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**இல்லை.**

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.17 18:29:32 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**நத்தம்.**